வை. நாகராஜன்

SITHY VINAYAGAR LIBRARY
SARLALAI WEST
CHUNNAKAM
SA 1-21

# மாணவர் நல்லுரைக் கோவை

வைர மான்
வெளியீடு



HINDU COLLEGE

N. Prabakaran
Co HINDU
A/L

அன்பளிப்பு
பிரதிநிதி
குழு

SITHY VINAYAGAR LIBRARY
SAL-21
EARLALAI WEST
CHUNNAKAM

HINDU COLLEGE
JAFFNA

# மாணவர்
# நல்லுரைக் கோவை

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM
SAL-21

வை. நாகராஜன்

வைர மான்
வெளியீடு

அநுராதபுரம்—இலங்கை

**வைரமான் வெளியீடு: உ**

முதற்பதிப்பு: நள ஆண்டு, ஆனித் திங்கள்

அச்சிட்டது: ஓட்டோ அச்சகம்,
122, மத்திய வீதி,
கொழும்பு-12.

உரிமை: பதிவாகியுள்ளது.

# MAANAVAR NALLURAIK KOVAI

Author: Vy. Nagarajan

No. of Pages: 48

Size: 1/8 Demy

Publishers: Vyramaan Veliyeedu,
525/29, New Town,
Anuradhapura-Ceylon,

Printers: Auto Printer,
122, Central Road,
Colombo-12.

Copy Right: Reserved

First Edition: June, 1976.

# வைரமான்

# உரை

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன், 'வீரகேசரி' நாளிதழில்— 'மாணவர் கேசரி' என்னும் ஓர் அரிய பகுதி மாணவர் நலங்கருதி வெளியாகிக் கொண் டிருந்தது. அதில் வாரந்தோறும் நல்ல பல விடயங்கள் மாணவருலகத்துக்குப் பயனுள்ளதாக வெளிவந்தன.

அவற்றுள், திரு. வை. நாகராஜன் அவர்கள் தொடர் கட்டுரையாக எழுதிய, 'மாணவர் நல்லுரைக் கோவை'யும் ஒன்றாகும். இதனை மாணவர்கள் முதற்கொண்டு பெரியவர்கள் வரை வரவேற்றுப் போற்றினார்கள்.

அக் கோவை, ஒரு நாளிதழில் வெளியானமையினால், அதனை எல்லோரும் படித்திருக்க முடியாது.

அத்தோடு, அதனை எல்லாக் காலத்துக்கும் பேணிக் காத்தும் வைத்திருக்க முடியாது.

எனவே, அக்கோவையை வைரமான் தனது இரண்டாவது நூல் வெளியீடாக வெளியிட விழைந்தது.

இதற்கான முன்னேற்பாடுகளை நூலாசிரியரின் மாணவர்களே முதற்கண் செய்து வைத்தார்கள். ஆசிரியர் அவர்கள், 1973—75ல் கொழும்பு உறேயல் கனிஷ்ட பாடசாலையில் அச்சுத் தொழிற் கலையை' தொழில் முன்னிலைப் பாடமாகப் போதித்த பொழுது, அவரது மாணவர்கள் சிலர் இந்நூலின் முதல் மூன்று கட்டுரைகளைத் தாமே அச்சுக் கோத்தும், சரவை பார்த்தும், அச்சிட்டும் வைத்தார்கள். அவர்கள் முயற்சி முழுவதும் முற்றுப்பெறவில்லை. அவர்கள் எண்ணம், ஈடேற வேண்டும் என்ற நோக்கில், அவர்கள் தொட்ட கோவையின் ஏனைய கட்டுரைகளை கொழும்பு, ஒட்டோ அச்சகத்தாரின் துணையுடன் அச்சிட்டு இங்கு, நூல்வடிவில் வழங்கியுள்ளோம்.

'மாணவர் கேசரி'யில் ஆசிரியர் அவர்கள் தனது முதலாவது கட்டுரையை 24-1-1964ல் எழுதினார்கள். அது, வாரந்தோறும் வளர்ந்து பத்துக் கட்டுரை களுடன் நிறைவு பெற்றது.

அப்பத்துக் கட்டுரைகளுடன் மேலும் இரண்டு கட்டுரைகள் இங்கு இந்நூலில் புதியவையாக இடம் பெற்றிருக்கின்றன. முன்னைய கட்டுரைகளில், ஓரிரு திருத்தங்களும், சுருக்கமும் இங்கு சேர்ந்துள்ளன. பின்னைய இரு கட்டுரைகளும் புதியவை-புதிய கண்ணோட்டத்தில்-இன்றைய சூழ்நிலையில் எழுதப் பெற்றவை. காலம், கருத்தைத் தெளிவுபடுத்தும் என்பதற்கு, இவ்விரு பின் கட்டுரைகளும் எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன.

இந் நூலாக்கத்தில், துணை நின்ற - ஆசிரியரின் அன்பகலா, அச்சுக்கலை மாணவர்களுக்கும், உருவும் மெருகும் ஊட்டிய ஒட்டோ அச்சக உரிமையாளர், அன்பர் திரு. கே தியாகராஜாவுக்கும், அவர்தம் ஊழியர்களுக்கும் **வைரமான்** நன்றியும், கடப்பாடும் கொண்டு நிற்கிறது.

ஆசிரியரின் முதல் நூலான 'மார்கழி மங்கையர்' எனும் அரிய நூலை வரவேற்று, ஆதரவு தந்த சைவ உலகத்தைப் போல் இந் நூலையும் மாணவர் உலகம் வரவேற்று, ஆதரவு நல்குவதோடு நற்பண்பும் நற்பயனும் அடையும் என **வைரமான்** மனப்பூர்வமாக நம்புகிறது.

நன்றி.



இந் நூல்,

என்

தந்தை

**நா. வைரமுத்து**

அவர்களுக்குக்

# காணிக்கை

# கோவைக்கு

# முன்.........

சில வார்த்தைகளை,

இங்கு எழுத விழைகிறேன்.

"எதையும் ஏன்? எதற்கு? எப்படி? என்று கேட்டு உன் சிந்தையை வளர்த்துக் கொள்!" என்றான், மாபெரும் கிரேக்க ஞானியான சோக்கிரட்டீஸ். அவன், அவ்வண்ணம் கேட்டுக் கொண்டமையினுற்றான், அவன் ஒரு சிந்தனைச் சிற்பியாக-சிந்தனையின் செம்மலாக-சிந்தனைக்கு ஒரு கருவூலமாக மாறினான்.

எனவே, என்னருமை மாணவ மணிகாள்!

இதோ... ......

உங்கள் சிந்தனைக்கோர் அரிய விருந்தாக, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு யான் 'வீரகேசரி'

நாளிதழின் 'மாணவர் கேசரி'யில் தந்த பத்துக் கேள்விகளுடன் மேலும் இரண்டு கேள்விகளை இங்கு உங்கள் முன் வைக்கிறேன். இவ் வினாக்களுக்கான, விடைகளையும், என் சிற்றறிவுக்கு எட்டிய மட்டில் தருகிறேன்.

வினாக்களைக் கேட்டுப் பாருங்கள்!
விடைகளைப் படித்துப் பாருங்கள்!
பின், முழுவதையுஞ் சுவைத்துப் பாருங்கள்.

கேட்பதோடும், படிப்பதோடும், சுவைப்பதோடும் நின்று விடாதீர்கள்! தொடர்ந்து நீங்களும், உங்கள் சிந்தனையைத் தூண்டிப் பாருங்கள். நல்லது-கெட்டதைப் பகுத்துப் பாருங்கள். ஏற்றதை ஏற்று-கற்பதைக் கசடறக் கற்று, கற்றாங் கொழுகுக!

"அன்னை நிழல்"
புதிய நகர், அநுராதபுரம்.
25-05-1976

# கேள்வி என்ன?

பக்கம்


1. பாடசாலை எதற்கு? 1

2. நூல் எதற்கு? 4

3. இன்சொல் எதற்கு? 7

4. கடமை எதற்கு? 10

5. கட்டுப்பாடு எதற்கு? 13

6. கண்ணியம் எதற்கு? 16

7. இங்கிதம் எதற்கு? 18

8. காலந்தவறுமை எதற்கு? 21

9. நல்லோர் இணக்கம் எதற்கு? 24

10. உடல் நலம் எதற்கு? 27

11. சிந்தனை எதற்கு? 30

12. மொழி எதற்கு? 37

# பாடசாலை

# எதற்கு?

"பாடசாலை எதற்கு? பாடம் படிப்பதற்கு" — எனச் சுருங்கச் சொல்லி விடலாம். ஆனால் என்ன பாடம் என்ற வினா எழும்பொழுதுதான் விடயம் விரிவடைகிறது.

நூலைப் படிப்பதும், அதை நினைப்பதும் பாடந்தான்; வாழ்க்கையை அநுபவித்து நினைப்பதும் பாடந்தான்; பிறர் வாயிலாக அறியாததை அறிந்து நினைப்பதும் பாடந்தான்!

இவை போன்ற பாடத்தைத் தொடக்கிக் கொடுக்கும் நிலையமே பாடசாலையாகும். அஃதே அறிவுக்கு வித்திடும் வயல் நிலம் - அதுவே வாழ்வுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம்!

இளவயதினர் யாவரும் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். ஏனெனில் அங்குதான் அவர்களின் பிற்கால வாழ்வுக்கான கல்வியும், பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. மேலும் அவர்களது இளமைப் பருவமே

பாடம் படிக்கவும், படித்ததை நினைக்கவும். நினைந்து நினைந்து ஒழுகப் பழகவும் தகுந்த உன்னதமான காலமுமாகும்.

ஒரு மரத்தை நாம் விரும்பியவாறு அதனுடைய பிஞ்சுப்பருவத்தில் வளர்த்துவிடலாமேயொழிய அதன் முதிர்ந்த பருவத்திலன்று. அதே போல் ஒரு குழந்தையின் உள்ளத்தையும், அறிவையும் அதன் இளமைப் பருவத்திலேயே கணித்து, திட்டமிட்டு நல்வழியில் வகுத்துவிடலாம். அதே பருவத்தில் தான், அவர்களுக்கான சிறந்த ஒழுக்கங்களையும் சுலபமாகக் கற்பித்து விடலாம். இதனாலன்றோ 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்தாகும்' என்று எமது ஆன்றோரும் பழுதறப் பகர்ந்துள்ளனர்.

அவ்வாறல்லாமல், அக்குழந்தை முதிர்ந்த பின் அதன்பால் அறிவைப் புகுத்த நாம் எண்ணினால் முதிர்ந்த மரத்தை நமதெண்ணப்படி வளர்க்க முயற்சிப்பது போலல்லவா ஆகிவிடும். மேலும், உடலும் அறிவும் ஒரு வயது வரை தான் தமது வளர்ச்சிக்கு இடம் கொடுக்குமென்பதும் யாம் அறிதற்குரியதாம்.

எனவே இள்மையில் தேடும் அறிவுதான் கல்லிற் செதுக்கிய அற்புதச் சிலைபோல் காலவெள்ளத்தையுங் கடந்து நிற்கவல்லதென்பது ஐயந்திரிபற்ற பொன்மொழியாம்.

ஒரு மாணவன் பாடசாலைக்குச் சென்று பெறுவது என்ன? அவன் பெறுவது அறிவுதான்! சந்தேகமில்லை. எவ்விதமான அறிவு? ஆராய்வோமாக -- தெளிந்த நூலறிவு, ஆழ்ந்த அநுபவ அறிவு, தெளிந்த விற்பன்னரின் செறிந்த அறிவு--இவையே உண்மை அறிவாகும்.

இவற்றையே அங்கு அவனுக்குக் கைதேர்ந்த ஆசிரியர்கள் அவனுடைய வயது, உடல் வலிமை, உளவாற்றல் என்பவற்றுக்கேற்ப அறிவையூட்டியும், அறிவைச் சேகரித்துங் கொடுப்பார்கள். இறுதியில் அறியாமை யென்னும் இருளில் இருந்து அவன் மீட்கப் படுவான்.

மேலும் பாடசாலையில் நல்லொழுக்கம், நற்பழக்கம் என்பனவும் போதிக்கப்படும். வீட்டில் இவற்றை ஓரளவு படிக்கலாம்.

எனினும் பாடசாலையில் பல மாணவரோடு பழகும் சந்தர்ப்பமும், நல்லுறவும், நட்பும், புதிய சூழ்நிலையும் கிடைப்பதுபோல வீட்டில் கிடைக்குமா என்பது சந்தேகத்திற்குரியதே. பழக்க வழக்கமும், ஒழுக்கமும் பலருடனும் பழகும்போதும், சூழ்நிலைக்குத் தகுந்த வண்ணம் ஒழுகும் போதுதான் அவற்றின் பலாபலன்கள் நன்கு கிடைக்கப்பெறும்.

நமது ஒழுக்கமும், நடையுடை பாவனையுமே நம்மை அறிவு உடையவர்களாகவும் அறிவற்றவர்களாகவும் காட்டிக் கொடுக்கவல்லன. அவைகளே நமது பிற்கால வாழ்க்கையையும் நிர்ணயிக்க துணைபுரிவன. மாற்றூர் ஒருவர் நம்மை முதல்முதலில் சந்தித்தவுடன் நமது நடையுடை பாவனைகளையும், குணாதிசயங்களையுமே முதற்கண் கவனிப்பர். அவற்றில் குறை கண்டவுடன் நம்மை அவர்கள் இழிவு செய்வார்கள். நமது குடும்பத்தைப் பழிப்பார்கள். நாம் எந்தக் கல்லூரியில் கல்வி கற்றோமெனக் கேட்டு எள்ளி நகையாடுவார்கள். இதன் பொருட்டே ஒழுக்கமே உயிரினும் உயர்ந்ததென அறிஞர் பலர் கூறியுள்ளனர்.

அறிவியல், பொருளியல், அரசியல், கலையியல் என்ற வாழ்வியற் பாடங்களுடன் ஒழுக்க இயலையும் ஓதித் தருவது பாடசாலையாகும். அவற்றை அனுபவித்துப் பார் என எம்மை இவ்வுலகில் விடுவதும் அதே பாடசாலைதான் எனின் மிகையாகாது.

*

# நூல் எதற்கு?

புத்தகம், பனுவல், ஏடு என்பனவற்றிக்கு இன்னுமொரு சொல் நூலாகும். மென்மையான இழை, மெல்லிய கயிறு என்பனவற்றுக்கும் நூல் என்றே கூறுகிறோம். முன்னைய நூல் அறிவில் இழையோடும் நூல். பின்னைய நூல் சீலையில் இழையோடும் நூல். மேலும், முன்னையதை அறிகயிறு என்றும் கூறுவர். அஃதாவது அறிவை அறியத் துணை புரியும் கயிறு என்பது கருத்தாகும்.

நூல்கள் அறிவின் களஞ்சியங்களாம். ஒரு விடயத்தை நாம் அறிய அவ்விடயம் தெரிந்தோரைக் கேட்பதும் அதைப் பற்றிய தகவல்களைத் தரும் நூல்களைப் படிப்பதும் வழக்கம். நூலெனும் களஞ்சியம் எம்முடன் எங்கும் வரக்கூடியது. எமக்கு வேண்டிய பொருளை, அது விற்கப்படும் பண்டகசாலைக்குச் சென்று பெற்றுக் கொள்ளலாமேயொழிய, நாம் போகும் இடமெல்லாம் அப்பண்டகசாலையை எடுத்துச் செல்ல முடியாது அல்லவா? ஆனால், நூல் எனும் களஞ்சியச்சாலை

அப்படியல்ல. நாம் போகும் இடமெல்லாம் அதனை எடுத்துச் செல்லலாம். அதிலிருந்து நமக்கு வேண்டிய அறிவெனும் அமுதத்தை வேண்டிய வேண்டியவாறு எடுத்து உண்ணலாம்.

ஒரு காலத்தில் நூல்கள் மிகக் குறைவாகவே இருந்தன. இருந்த சில நூல்களும், கையினால் எழுதப் பட்ட ஓலைச்சுவடிகளாகவும், தகடுகளாகவுமே இருந் திருக்கின்றன. மேலும் அவை காலவெள்ளத்தால் அழிந்து ஒழிந்துபோகக் கூடியனவாகவும் இருந்தன. அந்நிலை இன்று மாறிவிட்டது. அச்சகங்களும், நவீன முறைகளும், புதிய கண்டுபிடிப்புகளும், விதம் விதமான சாதனங்களும், உபகரணங்களும் துணைபுரிய இன்று இலட்சக்கணக்கில் நூல்கள் வெளியாகிக் கொண்டு இருக்கின்றன. ஒரே கருத்துடைய பல நூல்களும் பல்வேறு கருத்துக்களையுடைய எண்ணிலடங்கா நூல் களும் பற்பல மொழிகளில் — பற்பல வகையில் — நாவிதமாக இன்று நாட்டில் மலிந்திருக்கின்றன.

கதை, கவிதை, காவியம், ஓவியம், அறிவியல், பொருளியல், அரசியல், கலையியல் இன்ன பிறவும் நூல் வடிவில் இளையோர் முதற்கொண்டு முதியோர் வரை படித்துப் பயனும், பக்குவமும் அடைய இன்று வெளியாகிக் கொண்டிருக்கின்றன. ஒரு நிமிடத்திற்குள் படித்து முடிப்பதற்கும் நூல்கள் இருக்கின்றன. யுகயுகாந்திர காலம்வரை படித்துப் பயனும், இன்பமும் பெற நூல்கள் இன்று இருக் கின்றன எனின் அது மிகையாகாது. இத்துணை வசதிகளோடு இருக்கும் நமக்கு இன்று தேவையாக இருப்பது ஒன்றே ஒன்றுதான். அதுவே படிக்கும் பழக்கமாம். இதனை எவரும், சிறிது முயன்றால் இலகுவிற் பெற்று விடலாம்.

நூல்களில் எந்த நூலைப் படிப்பது என்பதுதான் எமது அடுத்த கேள்வி. கற்கள் எல்லாம் மாணிக்கங் கள் அல்ல, அதேபோல நூல்கள் எல்லாம் நூல்கள்

அல்ல. சில நூல்கள் சிறந்தவை; பல நூல்கள் தீயவை; இன்னும் பல நூல்கள் மனித சமுதாயத்திற்கே தேவை அற்றவை. இதன் பொருட்டே ஓர் அறிஞர், ''பல நூல்களைச் சுவைக்கலாம். மற்றவைகளை விழுங்கி விடலாம். ஆனால் ஒரு சிலவற்றை மட்டுந்தான் மென்று சாப்பிட்டு, சீரணிக்கச் செய்யலாம்'' என்று மிகவும் சுவைபடக் கூறுகிறார்.

இதனால் யாது கருதுகிறோமெனின், சில நூல்களின் ஒரு சில பகுதிகளைத் தான் படித்துச் சுவைக்கலாம் என்பதும், சில நூல்களைக் கவனமாகப் படித்துத்தான் பயன் பெற வேண்டும் என்பதுமல்ல, என்றும் அவற்றை மேலெழுந்தவாரியாக வாசித்து விட்டால் போதும் என்பதும்; சில நூல்களை மட்டுமே கவனமாகக் கற்று, வேண்டிய வேண்டியவாறு அதன் கருத்துக்களை நினைவுறுத்திப் பயன்கொள்ள வேண்டும் என்பதும் புலனாகிறது. இவ்வழியில் வழிகாட்டவே எமது ஆசிரியர்களும், பெரியோர்களும் நமக்கு என்றென்றும் இருக்கவே இருக்கிறார்கள்.

எனவே தான் நல்ல நூல்களை-பயன்தரு நூல்களைக் கவனமாகவும், அக்கறையாகவும் கற்க வேண்டும் என்கிறோம். அவ்விதம் கற்போமானால், அதுவே நமது அறிவெனும் செல்வத்திற்கு நாம் அமைக்கும் உறுதியான சேமிப்பாகும். அதுவே நமது வாழ்வெனும் மாளிகைக்கான உறுதியான அடித்தளமுமாகும்.

மாணவர்களே! இறுதியாக ஒரு வார்த்தை.... நீங்கள் வாசிக்கும் நூல்களைப் பற்றிக்கூறுங்கள். யான் உங்களைப் பற்றிக் கூறுகிறேன்.

# இன்சொல்

# எதற்கு?

சொல்லில் வன்சொல், இன்சொல் என இருவகை உண்டு. முன்னையது கடுமையானது; பின்னையது இனிமையானது. வன்சொல் தீமை விளைவிக்கும்; இன்சொல் நன்மை தரும். அது எட்டிக்காயைப் போன்றது; இது முக்கனியைப் போன்றது.

''பேசாத பேச்சால், பேச்சுக்கு நீ எசமானாகிறாய். பேசிய பேச்சால், நீ பேச்சுக்கு அடிமையாகிறாய்'' என்று ஆங்கிலத்தில் சொல் வழக்கு ஒன்று உண்டு. இவ்வாக்கிற் பொதிந்திருக்கும் உண்மைகளை நாம் உய்த்துணர்தல் வேண்டும். ஒரு பொழுது கூறிய வார்த்தையை மறுகணம் அதை அழித்தோ அன்றி திருத்தியோ கூறமுடியாது. வாயினால் உதிர்த்த சொற்களை மீண்டும் வாய்க்குள் எடுத்துக்கொள்ள முடியாது. அதேபோல், சில சமயங்களில் அச்சொற்கள் கொண்டு வரும் அநர்த்தங்களையும் நம்மால் தடுத்து நிறுத்தவும் முடியாது.

ஆதலால் பேசும்போதே நாம் சிந்தித்துப் பேசத் தெரிந்துகொள்ள வேண்டும். அதிலும், வன்சொற் களைச் சொல்லாதிருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். இன்சொல் சிறிதாயினும் சரி, குறைவாயினும் சரி, அது பெரும் சக்தி வாய்ந்தது. அதைப் பேசுபவனுக்கு அது பெரும் உதவியையும், உற்சாகத்தையும் அளிப்ப தோடு அவன் சூழலையும் மகிழ்ச்சியுடையதாக விளங்கச் செய்யும்.

இன்சொற்கள் இரவியின் தூயகதிர்களைப் போல், நம்மிற் குடிபுகும் அறியாமை, ஆணவம், போட்டி, பொறாமை, கோபம் போன்ற இன்னோரன்ன தீய குணமுடைய காரிருளைப் போக்கவல்லன. ஒரு சிறிய இன்சொல்லே உலகத்தில் உள்ள அத்தனை வேற்றுமை களையும் அழித்து, அமைதியையும், நல்லுறவையும் கொண்டுவர வல்லது. அதன் கவிகைக்குள் அன்பெனும் அரசு செங்கோலோச்சும்.

இவற்றுக்கு மாறானது, வன்சொல். அஃது ஆல கால விடத்தைப் போன்றது. ஆயிரமாயிரம் ஆண்டு காலமாக வளர்த்த அன்பை - அமைதியை - நட்பை அரைநொடியிற் சிதைத்து, சின்னாபின்னமாக்கி நிர்மூல மாக்க வல்லது, வன்சொல் எனின் மிகைபடாது. அது மற்றவர் மனதை வெகுவிரைவில் திருப்தியற்றதாகவும், மகிழ்ச்சியற்றதாகவும் செய்துவிடும். இதனாலன்றோ, தெய்வப்புலவர் திருவள்ளுவரும்,

> ''தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
> நாவினாற் சுட்ட வடு''

என வெகு நயம்படக் கூறியுள்ளார்.

வன்சொல் எந்நேரமும் துன்பத்தையும், துயரத் தையும், நட்டத்தையும் தந்து கொண்டேயிருக்கும். அஃது அத்துணை கொடூரமானது, கொடுமை நிறைந்தது.

நமது மனம் மலர முகம் புன்முறுவல் புரியும். இதற்கு மாருக மனம் குவிந்தால், முகம் கடுகடுக்கும்; கோபம் கொப்பளிக்கும். இவற்றுக்குக் காரணம் நமது உள்ளத்து உணர்வும் அதன் பழக்கமுமாம். இன் சொற்களைப் பேசுவதற்குத் துணைபுரிவதும், உள்ளத்தின் நல்லுணர்வும் அதன் நற்பழக்கமுமாம். எடுத்ததற்கு எல்லாம் கோபிப்பதும் அதன் பழக்கமேயாம். இது முற்கோபத்தை வளர்த்து எந்நேரமும் முசத்தை அருவருப்பு உடையதாக விளங்கச் செய்யும். அதேபோல் வன்சொற்களும் கொடுமை, குரூரம், கோரம் நிறைந்த அசுரவடிவை நமது உடலிலும் உள்ளத்திலும் வளர்த்து விடும்.

...COLLEGE

எனவே, இன்சொற்களை எந்நேரமும் பேசி, எல்லார் நினைவிலும் இனியவராகத் திகழ வழிவகுக்க வேண்டும்.

இன்சொல்லின் உண்மையான பிறப்பிடம், தன்னல மற்றுப் பிறர் நலங் கருதும் தூய அன்பிலே தான் உண்டு. பிறர் மனங்கோணுது இருக்க, வீண் பழி கூருமலும், போட்டி, பொருமை, கோபம் என்பனவற்றைப் பேணு மலும் இருக்கவேண்டும். அவ்விதம் இருப்போமாஞல், உண்மை அன்பு எல்லாருள்ளத்திலும் சுரக்கும்.

நமக்கு நல்லதல்ல என்று நாம் நினைப்பதை நம்மை, அண்டி இருக்கும் அயலவர்க்கும் அதைச் செய்யாது இருப்போமாக. பிறர் எமக்கு எதைச் செய்ய வேண்டும் என்று நாம் நினைக்கிறேமோ, அதை நாமும் பிறருக்கு செய்வோமாக. இப்பொன்மொழியின் செயலே, இன் சொல் என்னும் அன்புப்பயிருக்கு நாம் ஊற்றும் முதல் நீராகும்.

✲

# கடமை

# எதற்கு?

கடமை முதல்; பலன் பின்பு. கடமையைச் செய்; உரிமையைப் பெறு. கடமை செய்யாதவன் உரிமை பெற உரிமையில்லை.

தந்தைக்குக் கடன் தன் மகனை அவையில் முந்தி இருக்கச் செய்தல். தனயனுக்குக் கடன் 'இவன் தந்தை இவனைப் பெற என்ன தவஞ்செய்தானோ' எனப் புகழ பெயர் தேடிக்கொடுப்பதாம். இவ்விதம் ஒவ்வொருவரும் தத்தம் கடமை என்னவென்றுணர்ந்து அதைச் செய்தல் வேண்டும். மாணவன் தன் பாடங்களை கருத்தோடு கற்று ஆசிரியருக்கு ஒப்புவித்தல், தன் தாய், தந்தையர், குரு, பெரியோர் சொற்படி நடப்பது எனப் பல கடமைகளைச் செய்ய வேண்டியவனாகிறான். அதேபோல் நாட்டில் இருக்கும் ஒவ்வொருவரும் அவரவர் கடமைகளைச் செய்ய வேண்டியது மிக மிக அவசியமாகிறது.

ஏனெனில் நமது சமுதாய அமைப்பு முறை ஒருவருடைய கடமையோடு முடிவதில்லை. மற்றவருடைய கடமையோடும் இணைந்தே பூரணத்துவமடைகிறது.

இதில் ஒருவர்தானும் தன் கடமையைச் செவ்வனே செய்யாதிருப்பின் மற்றவருடைய கடமைகளும் செவ்வனே நடைபெருது குழப்பத்திற்கு உள்ளாகிவிடும்.

உதாரணமாக, ஓர் உழவனை எடுத்துக்கொள்வோம். அவன் தனது வயலைப் பண்படுத்த, தகுந்த கருவிகளை உரியகாலத்தில் உரிய தொழிலாளரிடம் பெற வாய்ப்பில்லாமலிருப்பானுனல் - அவனுடைய கடமை தடைப்படும். அதனுல் உழவு நடைபெருது-தானியம் விளையாது-அதன் விளைவால் நாட்டில் பஞ்சம், பசி, பிணி என்று வளர்ந்து, நாட்டு மக்கள் அனைவரும் பாதிக்கப்படுவர். ஒரு சிலரின் கடமை உதாசீனத்தால் ஒரு நாடே- ஏன் அனைத்துமே அல்லற்பட்டதை—அல்லற்படுவதை நாம் கண்டுங் கேட்டுமிருக்கிருேமல்லவா?

மேலும், ஒரு கடமையை ஏற்றுச் செய்யவேண்டிய ஒருவன், அக்கடமையைச் செய்வதில் அசிரத்தையோ அல்லது காலதாமதமோ செய்வதும் நல்லதல்ல. அதனுல் அவனுக்கு மட்டுமல்ல அவனை நாடியிருக்கும் அனைத்துக்கும் பல இன்னல்களும் இடையூறுகளும் நேர்ந்துவிடும். இஃது அதிருப்தியையும், கோபத்தையும், குரோதத்தையும் வளர்க்கும். சில சமயங்களில் அவை, கொலை, களவு என்றும் வளர்வதுண்டு. முதலாளி-தொழிலாளி என்றிருக்கும் இன்றைய சமூகத்தில், முதலாளிக்கு வேண்டிய கடமையை, தொழிலாளி செய்யத் தவறுவதாலும்; தொழிலாளிக்கு வேண்டியதை முதலாளி கொடுக்கத் தவறுவதாலும் இன்று பெரும் புரட்சிகளும், புரளிகளும், பூசல்களும், வேலைநிறுத்தங்களும் நடைபெற்று வருகின்றன அல்லவா? இவை

யெல்லாம் எவற்றுக்கு? எப்படி வருகின்றன? இவர்கள் இருவரும் தத்தமது கடமைகளைச் சரிவரச் செய்து கொண்டால், அவையெல்லாம் உண்டாக முடியுமா? இதிலிருந்து கடமையின் சக்தி எவ்வளவு பலம் வாய்ந்தது என்று உய்த்துணர்க.

''மனிதன் தன் கடமைகளை உணர்ந்து ஒழுகும் போது தான் வாழ்வின் பற்பல கோணங்களை அவன் காணுகிறான்,'' என்று மகாத்மா காந்தி ஒருசமயம் கூறினார். இப்பொன்மொழியில் எவ்வளவு உண்மை பொதிந்திருக்கிறது என்று சற்றுப் பாருங்கள். நாம் எமது கடமைகளைச் சரிவரச் செய்துகொண்டு போகும் பொழுதுதான், பலவிதமான அநுபவங்களையும் வாழ் வின் உட்பொருளையுங் காணமுடியும். இதில் இன்னு மொரு விடயத்தையும் யாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது, கடமை என்றால் எல்லாம் கடமை யல்ல தீயகாரியங்களுங் கடமைகளாக முடியுமா? திருட் டுத் தொழில் திருடனுக்குக் கடமை என்று வாதிக்க லாம். ஆனால் அதுவும் ஒரு கடமையாக இருக்க என்ன யோக்கியதை பெற்றிருக்கிறது? எனவே, ''நல்ல காரி யங்கள்'' தான் நல்லவர்களுடைய கடமைகள் என்று கடைப்பிடித்தல் வேண்டும். ''தீயவொழுக்கங்களுடன் ஒத்துழையாமையே சிறந்த தெய்வீகமான கடமை'' என, காந்திமகான் கூறியதை நாம் எந்நேரமும் எம் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

உண்மை எனப்படுவது தெய்வீகத்தின் வாக்கு; கடமை என்பது தெய்வீகத்தின் கட்டளை என்பதை யும் என்றும் மறவாதிருப்போமாக.

★

# கட்டுப்பாடு

# எதற்கு?

வரம்பு இல்லாத வயல் நாசம்; வேலியில்லாத பயிர் வீண்; கட்டுப்பாடில்லாத வாழ்வு பாழ், என்பது முற்றிலும் உண்மை.

மனம் எண்ணுததையும், எண்ணக்கூடாததையும் எண்ணும். அதன் போக்கில் நாமும் போனுல் முடிவு எப்படி இருக்கும்? இதனுல் தான் கட்டுப்பாடு அவசியம் தேவை என்கிருர்கள், பெரியவர்கள்.

தன்னடக்கம் இல்லாதவன் தறுதலேயாகி தனக்கும் தன்னேச் சார்ந்தோருக்கும், தன்னேப் பெற்ற தாய்நாட்டுக்கும், ஏன், தன் சமுதாயத்துக்குமே உதவாக்கரையாக மாறி விடுகிருன். தன்னடக்கத்தைப் புலனடக்கம் என்றுங் கூறுவர். அதாவது, மெய், வாய், கண், காது, மூக்கு என்பனவற்றைத் தமது இஷ்டப்படி போக விடாது ஆட்சி செய்ய வேண்டும் என்பதாம். தீயனவற்றை மெய் (உடல்) யாலோ, வாயாலோ, கண்களாலோ,

காதுகளினாலோ, மூக்கினாலோ செய்யாதிருக்க வேண்டும். இதனாலேயே, தகாதவையைச் செய்யாதே, தகாதவையைப் பேசாதே, தகாதவையைப் பார்க்காதே, தகாதவையைக் கேட்காதே, தகாதவையை முகராதே... என்றெல்லாம் பெரியவர்கள் கட்டளையிட்டு இருப்பதும் ஈண்டு நோக்கற்பாலது. இதன்பொருட்டே, வள்ளுவப் பெருந்தகையும்—

''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.''

என்று, ஐம்பொறிகளினதும் தீச்செயல்களை அடக்கி ஒழுக்க நெறியில் வாழ்வோரே, உலகில் நீண்டநாள் வாழ்வார்கள் என்றுங் கூறியிருக்கிறார். மேலும், அத்தகையோரின் வாழ்வு இம்மைக்கும் மறுமைக்கும் நீடிக்கும் என்பதும் மிகையாகாது.

நல்லவற்றை எண்ணி, நல்லவற்றைப் பேசி, நல்லவற்றைச் செய்பவர்கள் இவ்வுலகில் நெடுங்காலம் மனமகிழ்ச்சியோடு வாழ்வார்கள் என்பது உள நூலாளர்களின் தெளிந்த கருத்தாகும். அதேபோல் உடல் நூலாளர்களும், ஒழுக்கந் தவறாமல் வாழ்ந்தவருடைய உடலானது நோயின்றி நெடுநாள் உயிர் வாழத் துணைபுரியும் எனவுங் கூறியிருப்பதும் ஈண்டு உய்த்துணரத்தக்கது.

கட்டுப்பாடு என்பது கடையில் வாங்கக்கூடிய கடைச் சரக்கல்ல. அதை நாமே நமது உள்ளத்திற் பயிர் செய்து, அறுவடை செய்யும் ஓர் அரிய பொருளாகும். அஃது, இளமை முதற்கொண்டே நமது ஒழுக்க நெறியோடு குறுநடை பழகி, பெருநடை கொண்டு வளர வேண்டும். அது நமது முதுமையில்

வளரக் கூடியதுமல்ல; அடங்கக்கூடியதுமல்ல.

பாதகச் செயல்களுக்கு நமது புலன்களைச் செல்ல வொட்டாது, நன்னெறிச் செயல்களுக்கே அவற்றைப் பயன்படுத்தல் வேண்டும். இதனால் உள்ளம் ஒடுக்கமுறும்—கட்டுப்பாடு ஆட்சி பெறும்.

இதில், மேலும் ஒரு விடயத்தையுங் கவனித்துக் கொள்ள வேண்டும். அதாவது, நற்கருமங்களை நாம் ஆற்றும்பொழுதும் நமக்குக் கட்டுப்பாடு அவசிய மாகிறது. ஏனெனில், எதிலும் ஓர் அளவுப் பிரமாணம் தேவையாக இருக்கிறது அல்லவா? எத்தகைய நற் காரியம் ஆனாலும், "அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சாகும்" என்பது போலாகி விடுமன்றோ! எனவே, கட்டுப்பாட்டை நல்ல செயல்களுக்கு, அளவுக்கு மிஞ்சாமலும் தீய செயல்களுக்கு முற்றாகக் கடைப் பிடித்தும் வாழ்வோமாக.

✱

# கண்ணியம்

# எதற்கு?

கண்ணியம் கண் போன்றது. பேச்சிலே, செயலிலே, நடையுடை பாவனையிலே கண்ணியம் வேண்டும், என்பார்கள் எமது பெரியோர்கள். தன்னடக்கத்திலே வளர்வது கண்ணியம். மனிதனாகப் பிறந்த அத்தனைபேரிலும் அது குடிகொண்டு இலங்க வேண்டும். கண்ணியம் இல்லாதவன் கண்ணிருந்துங் கபோதிக்குச் சமானமானவன். கண்ணியம் அற்றவன் பேச்சுக்கு யாரும் செவி சாய்க்கமாட்டார்கள். அவன் செயல், நன்றாகயிருப்பினும், அது அம்பலமேறாது. அவன் நாயினுங் கடையனாகவே சமுதாயத்தில் இகழப்படுவான்.

கண்ணியம் என்றால் என்ன? நெறியான வாழ்வில் நிலைமாறாது, மதிப்புக் குன்றாது வாழும் வாழ்வைக் கண்ணியமான வாழ்வு எனப்பொருள் கொள்ளலாம். இதனைக் கௌரவமான வாழ்வு எனவுங் கூறலாம்.

பேச்சிலே கண்ணியம் இருக்கவேண்டும். இனிய சொற்களைப் பேசவேண்டும். வன்சொற்களை அகற்ற

வேண்டும். சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். அதாவது, பேச்சிலே நாணயம், நேர்மை, தூய்மை, உண்மை என்பன நடமாட வேண்டும். கண்ணியமற்ற பேச்சு சுயமரியாதையை இழக்கச் செய்யும். அது துன்பத்தைக் கொண்டுவரும். கண்ணியமான பேச்சு உயர்வை, மதிப்பை, அன்பை, பண்பை எந்நேரமும் வளர்க்கும்.

செயலிலும் கண்ணியம் இருத்தல் வேண்டும். செயலிலே மாசிருப்பின், சாக்கடையை ஒத்த வாழ்வே கிடைக்கப்பெறும். அது நம்மையுங் கெடுத்து, நமது சூழலையும் அழித்து, நிர்மூலமாக்கிவிடும். இதிற் சிறிதேனும் ஐயமில்லை. சான்றோர் பழிக்குஞ் செயலைச் செய்யாதிருப்பின், கண்ணியம் நிமிர் நடையும், உயர் நோக்கும் பெறும் என்பதில் ஏதேனும் சந்தேகம் உண்டோ?

ஒழுக்கத்திலும் கண்ணியம் சிறந்தோங்க வேண்டும். கொல்லாமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை, கள்ளாமை, சோரம் போகாமை எனும் பஞ்சசீலங்களையும் பிடித்தொழுகின் கண்ணியம் பொலிவுற்று, பொன்னென மிளிரும்.

நல்லறிவு, நன்னினைவு, நல்வாழ்வு நன்முயற்சி, நல்விழிப்பு, நல்லொருமை என்பனவற்றுடன் மேற்கூறிய நற்பேச்சு, நற்செயல் என்பனவுங் கண்ணியம் எனும் உடலை வளர்க்குஞ் சத்து நிறைந்த சத்துணவுகள் எனின் மிகையாகாதன்றோ?

★

# இங்கிதம்

# எதற்கு?

பருவப் பெண்ணொருத்தி, திருமணமாகித் தனது கணவனது இல்லத்துக்குச் செல்லும் பொழுது, "மகளே நீ, உன் கணவன் வீட்டிலும் அவரது அயலவரிடத்திலும் இங்கிதமாக நடந்துகொள்" என்று பெரியோர்கள் வாழ்த்துவதை நாம் கேட்டிருக்கிறோம் அல்லவா? இங்கிதமாக நடந்துகொள், என்றால் என்ன? எல்லாருடனும் இனிமையாகப் பழகிக்கொள், என்பது இதன் கருத்தாகும். இதை இன்னும் சற்று விரித்து ஆராய்வோமாக.

மனித வாழ்வு இன்பமும் துன்பமும் நிறைந்தே விளங்கும். மனிதருள், பலவிதமான மனோநிலைகளை உடையவர்கள் உண்டு. ஒருவர் எதற்கெடுத்தாலும் முற்கோபத்தோடு இருப்பார். பிறிதொருவர் எந்நேரமும் பொறாமையும், குரோதமும் குடிகொண்டவராக இருப்பார். இன்னுமொருவர், சதா தீயகருமங்களைச் செய்வதிலேயே இன்பங் காணுபவராக

இருப்பார். இவற்றுக்கு மாறாகச் சிலர், நல்லவர் போல் நடித்து, பாதகஞ்செய்பவராக இருப்பர். இன்னும் சிலர், பிறர் நலமே, தம் நலமென்று எந்நேரமும் பிறர் தொண்டிலேயே காலங் கழிக்குந் தியாக சீலர்களாக இருப்பார்கள். இப்படியே, நன்மையும்-தீமையும், நல்லவர்களும்-தீயவர்களும் கலந்தே நமது மனித சமுதாயம் அமைந்து இருக்கிறது. இந்த நிலையில் தான், நாம் எல்லாருடனும் எப்படி வாழ வேண்டும் என்ற கேள்வி எமது உள்ளத்தில் தோன்றாமல் தோன்றும்.

ஆம்! நாமும் நல்லவராக வாழவேண்டும்; மற்றவர்களையும் தீயவழியிற் புகவிடாது நல்லவராக வாழ, நம்மால் ஆனதைச் செய்ய வேண்டும். இதற்கான வழிகளில் ஒன்றுதான், நாம் எந்நேரமும் இனிமையானவராக மற்றவர்களுக்குத் தோற்றவேண்டும் என்பதாம். அத்துடன், இனிமையானவராக வாழ்ந்து காட்டவும் வேண்டும். ஆணவம், அகந்தை, ஆக்கிரமிப்பு அற்றவராகவும்; அன்பு, பண்பு, பணிவு, நட்பு உடையவராகவும் விளங்கவேண்டும்.

ஒவ்வொருவர் மனோநிலைக்குந் தகுந்தவண்ணம் நாமும் வாழ வேண்டும் என்பது, இங்கிதத்தின் பொருளல்ல. எமக்கென உறுதியான, நெறியான, அன்பான, பண்பான கொள்கை இருக்கவேண்டும். அதில் இருந்து எக்காரணத்தைக் கொண்டும் இமியேனும் பிறழலாகாது. இதை மட்டும் உறுதியாகக் கொண்டால், மற்றவர் மனோநிலை எப்படி இருந்தாலும் நம்நிலை சிதையாது. அதைக்கொண்டு எந்த மனோநிலையிலும் உள்ளவருடன் பேசிப் பழகி இனிமையாக நாம் நடந்துகொள்ளலாம். பின், நமது நடையிலே அவர் மகிழ்ந்து, தம்மைத் திருத்தி, நம்மைப்போல் நல்லவராகிவிடுவார் என்பதிற் சிறிதேனும் ஐயமில்லை. இதன் பொருட்டே "நீ நன்றாயிரு! உன்னைப்பார்த்து மற்றவரும் சிறப்புடன் இருப்பார்" எனப் பெரியோர்கள்

கூறியுள்ளார்கள்.

எனவே, நாம் எவருடனும் ஒருமித்து, ஒத்துழைத்து, கூட்டுறவோடு வாழவேண்டுமானால், நம் வாழ்வில் இங்கிதமான போக்கு இன்றியமையாது இலங்க வேண்டும்.

இங்கிதத்துக்கு இன்னும் ஒருவழி, ''விட்டுக்கொடுக்கும்'' மனப்பண்பை வளர்ப்பதாகும். விடாக்கண்டர்களுடனும் கொடாக்கண்டர்களுடனும் நாமும் விடாக்கண்டராகவே இருக்க முயற்சித்தால், பகைமையே வளரும். அன்பும், பண்பும், உயர்வும் வளரா. அஃது இங்கிதத்தின் ஆணிவேரையே அறுத்தெறிந்து விடும்.

★

# காலந் தவருமை

# எதற்கு?

"கடந்த காலத்தைக் காலமெல்லாங் காத்திருந்தாலும் திரும்பப் பெறமுடியாது" என்ற பொன்னன கருத்தில் ஆங்கிலத்தில் ஒரு சொற்ருெடர் உண்டு. இது முற்றிலும் உண்மையே.

மனிதன், தனது அன்ருட வாழ்வில் எத்தனேயோ கருமங்களோடும், மக்களோடும், பொருள்களோடும் இன்னபிறவற்ருேடும் தொடர்பு கொள்பவனுக இருக்கிருன் தெரியுமா? இத்தொடர்புகள் யாவுங் குறித்த காலத்தில், குறித்த ஒழுங்கின்படி செய்தாலொழிய அவை பூரணமான வெற்றியை அளிக்கா. குறித்த காலத்தில் குறித்த வேலேயைச் செய்பவன் எந்நேரமும் மகிழ்ச்சியோடு, இன்பமாக வாழ்வான். அதனுல் அவன் மற்றவர்களேயும் மகிழ்ச்சிக்கு உரியவர்களாகச் செய்துகொண்டிருப்பான். காலந் தவறிக் காரியஞ் செய்பவன் தானும் துன்பத்துக்குள் ஆளாவதோடு, மற்றவர்களேயுங் கஷ்டத்துக்குள்ளாக்கிக்

கொண்டே இருப்பான். அவன் எந்தக் காரியத்தையுங் காலத்தோடு செய்யான்; எல்லாம் குழம்பிய நிலையிலேயே இருக்கும்.

கைநழுவிய ஒரு பொருளை ஒருவன் மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், கடந்துபோன ஒரு பொழுதை என்ன முயற்சிதான் எடுத்தாலும் அதை அவன் மீண்டும் பெற்றுக் கொள்ள மாட்டான். பணம், பொருள், சொத்து, சுகம் யாவற்றிலுஞ் சிறந்தது காலம் எனின் மிகையாகாது. காலம் உயிரினும் மேலானது என்றுகூடக் கூறலாம்!

காலாகாலத்திற் காரியமாற்றுபவன் ஒருநாளும் தனது கருமங்களைப் புரிவதற்கு "நேரம் போதாது" என்று கூறமாட்டான். ஏனெனில் அவனது காரியங்கள் யாவும் வேளைக்குத் தகுந்த வண்ணங் குறித்த திட்டத்துக்கு இணங்க, சங்கிலித் தொடர்போல் ஒழுங்காக நடைபெறும். ஒரு கருமத்திற் சிறிது மாற்றம் ஏற்பட்டாலுங் கூட மற்றக் கருமங்கள் சீராக நடைபெற்று நிறைவெய்திவிடும். இவ்விதம் அவன் கருமங்களைக் காலந்தவறாமற் செய்வதால், அவன் வாழ்விற் பல நல்ல சந்தர்ப்பங்களை அணுகி வெற்றிக்கு மேல் வெற்றி பெற்று தன் வாழ்வையே பேரானந்தத்துக்கு உரியதாக அமைத்துக்கொள்வான்.

காலந்தவறும் தன்மை பொதுக் கடமைகளிலும் சரி, தனிப்பட்டோர் கடமைகளிலும் சரி எவ்வளவு இடர்களை உண்டுபண்ணுமென்று பாருங்கள். ஓர் உழவன் காலத்திற்கேற்ப, தகுந்த தருணத்தில், தனது வேலையைத் தொடங்காமற் சோம்பேறியாக இருப்பானானல் அவனது முயற்சி கெட்டுவிடும். அதனால் அவனுக்கும் உணவில்லை; அவனை நம்பியிருக்கும் ஏனையோருக்கும் அல்லவா உணவு இல்லாமற் போய்விடும்! நேரந்

தவருமற் குறித்த இடத்துக்குச் செல்லும் ஒரு புகையிரதம் அல்லது ஒரு வாகனம் குறித்த நேரத்துக்குச் செல்லாமலிருப்பின் எவ்வளவு கஷ்டங்களை நாம் அடைய வேண்டுமென்று தெரியுமா? இவற்றையெல்லாம் சிந்தித்துப் பாருங்கள்!

''இளமையிற் கல்'' என்று நமது பெரியவர்கள் கூறுகிருர்களே! எதற்காக? அப்பொழுதுதான் கற்கும் கல்வி தெளிவுறும். அந்தப் பருவத்தை இழந்துவிட்டு முதுமையிற் கற்க முயன்ருல், அஃது ஆற்றிற் கரைத்த புளிபோல் அல்லவா பயனற்று விடும். எனவே எதையுங் காலத்தோடுதான் செய்ய வேண்டும். காலங் கடந்து செய்யின் பலன் கிடைப்பது அரிது. இதனுலேயே, ''காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'' என்று ஓர் அழகான பழமொழியும் நம்மொழியில் இருந்து வருகிறது.

இத்தகைய உயரிய பழக்கத்தை, நமது இளமையிலேயே பயின்றுகொள்ள வழி செய்வோமாக. எதிலுங் காலந்தவருமை எம்மை என்றுங் குறைவற்ற நிலைக்கு உயர்த்துமென்பதிற் சிறிதேனும் சந்தேகமில்லை!

★

# நல்லோர் இணக்கம் எதற்கு?

''பன்றியோடு சேர்ந்த பசுக்கன்றும் மலமுண்ணும்'' என்று நமது பெரியோர்கள் சொல்லுவார்கள். இதற்குக் காரணமென்ன? சூழ்நிலை தானே? நமது சூழ்நிலைதான் நம்மை நல்லவர்களாகவும், தீயவர்களாகவும் உருவாக்குகிறது. நல்ல சூழ்நிலை நன்மையைப் பயக்கும்; தீயசூழ்நிலை தீயவற்றை விளைவிக்கும்.

ஒருவருடைய குலம், கோத்திரம், பிறப்பிலும், சூழ்நிலையே மேலானது. களர் நிலத்துப் பிறந்த உப்பானும் அருஞ்சுவை தரும் கறியோடு சேரும்போது இனிமையைப் பெறுகிறதல்லவா? அதே போல்தான் நல்லோர் இணக்கமும்.

நல்வினை, தீவினைகளைப் பகுத்தறியவல்ல சிறந்த அறிவினைப்பெற்ற பேரறிவுடைய நல்லாருடன் நாமும் சேர்ந்தால் எந்நேரமும் எமது வாழ்வில் நற்பேறுகள் உண்டாகும்; இன்பங்கள் வந்துகூடும்.

நல்லா ரிணக்கமும், நின்பூசை நேசமும்,
ஞானமுமே அல்லாது வேறு நிலையுளதோ.....

என்று பட்டினத்தடிகள் இறைவனை நினைந்து பாடும் போது, முதற்கண் வேண்டியது நல்லவருடைய உறவையேயாகும்.

பொன், பொருள் கொடுத்துப் பெறமுடியாத நல்லோர் நட்பை, எம்மிற் பலர் இலகுவிற் பெறக்கூடியதாக இருந்தும், அதனைச் செம்மையாகப் பயன் படுத்தத் தெரியாமல் தம் வாழ்நாளையும், அறிவையும் வீணே கழித்து விடுகின்றனர். என்னே பரிதாபம்!

இந்த நல்லோர் நமது துன்பத்துக்குக் காரணமான அறியாமையை அகற்றி, வாழ்வில் நற்பயனை அடைய வழிவகுக்க வல்லவர்கள். இவர்களால் உலகமே மேம் பாடுற்று மேலோங்குமென்பதில் ஐயமில்லை.

நல்லவர்களுடைய உறவு, பழகப் பழகத்தான் பயனளிக்கும். அவர் தம் இணக்கம் நுனிக்கரும்பிலிருந்து அடிக் கரும்புவரை சுவைப்பதுபோல் இருக்குமென்றும், தீயோர் இணக்கம் அதற்கு மறுதலையாக அடிக் கரும் பிலிருந்து நுனிக் கரும்புவரை சுவைப்பது போல் இருக் குமென்றும் நாலடியாரில் ஓர் அருமையான செய்யுள் இருக்கிறது.

தீயோரின் இணக்கம் முதலில் மிகவுங் கவர்ச்சி யாகவும், இனிமையாகவும், அன்பாகவும் இருக்கும். ஆனல், காலஞ் செல்லச் செல்ல அவை யாவும் போலி யெனத் தெரிந்துவிடும். நல்லோரின் இணக்கம் அப்படி யன்று; அவர்களுடைய நடை, உடை, பாவனை, ஒழுக்கம், சொல், செயல் என்பனவெல்லாம் மற்ற வர்களை இலகுவிற் கவரக்கூடியவையாய் இருக்க மாட்டா. ஆனல் அவற்றின் மதிப்பை உணர்ந்து அவ ரோடு பழகிவரின் அவை யாவும் விரைவில் நம்மோடு

கூடி, நம்மை அவரோடு சேர்த்து விடும்

மேலும் நன்மை, தீமைகளைப் பகுத்தறியவல்ல அறிவினைப் பெறாத புல்லறிவாளர்களுடன் நாமும் சேர்ந்தால் எந்நாளும் எமக்குத் துன்பந்தான் வரப்பெறும். ஆதலால் அவர்களைப் பிரிந்து வாழ்வதே துன்பத்தை விரும்பாத மக்களுடைய கடமையாகும்.

இக்கருத்தையே,

**உணரும் உணரும் உணர்வு டையாரைப்**
**புணரப் புணருமாம் இன்பம் - புணரின்**
**தெரியத் தெரியுமாம் தெரிவிலா தாரைப்**
**பிரியப் பிரியுமாம் நோய்.**

என்று ஒரு செய்யுள் கூறுவதையும் ஈண்டு உணர்க.

★

# உடல் நலம்

# எதற்கு?

கிரேக்க நாகரீகம் அகில உலகையும் கவர்ந்திருந்த பொன்னான நன்னாளில், எந்த ஒரு கிரேக்கன் அழகான உடலும், வசீகரத்தோற்றமும் உடையவனாக இருந்தானோ அவனுக்கே உயர்ந்த அந்தஸ்தும், மதிப்பும், பதவியும் அளிக்கப்பட்டனவென்று வரலாறுகள் பழுதறச் சான்று பகர்கின்றன. இதிலிருந்து நாம் அறிவதென்ன? உறுதியான உடல் நலம் உடையவனே உயர்ந்த அறிவும், நுண்ணிய புத்தியும், நேர்மைக் குணமும், சிறந்த ஆற்றலும் பெற்றவனும். இதன் பொருட்டே "உடல் நலம் உடைய உடலே சிறந்த மதியை உடையது" என்று ஆங்கிலத்திலும் ஒரு சொல் வழக்கு இருந்து வருகிறது.

உடல் நலமற்றவன் வாழ்வில் பொருள் இருந்தென்ன? அறிவு இருந்தென்ன? மனைவி மக்கள் இருந்தென்ன? உற்றார் உறவினர் இருந்தென்ன? இல்லை, வேறு என்ன தான் இருந்தென்ன? அவையாவும் அவன்

வாழ்வில், தூசிக்குச் சமானமன்றோ! "நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம்". இதனாலன்றோ வள்ளலாரும் இறைவனை நினைந்து பாடுகையில், "நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்" என்று இரந்து வேண்டியுள்ளார்.

நோயற்ற வாழ்வுக்கு நெறியான வாழ்வு வாழ வேண்டும். பஞ்சமா பாதகங்களோடு ஏனைய தீயபழக்க வழக்கங்களையும் அறவே விட்டொழிக்க வேண்டும். மேலும், நற்பழக்கங்களையுந் தேவையான வழி முறைகளையும் அளவோடும், காலத்தோடும் அநுசரித்துக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். நல் விருந்தானாலும் மருந்துபோல் பாவிக்க வேண்டும்.

இன்னும், நோய் வந்தபின் தடுப்பதிலும், வரு முன் அதைத் தடுப்பதே சிறந்த வழியாம். எனவே நோய் நம்மை அணுகாவண்ணம் நமது வாழ்வியல் முறையைச் செம்மையாகச் செப்பனிட்டு, திட்ட மிட்டு - குறிப்பிட்ட ஒழுங்கின்படி நடந்துகொள்ள வேண்டியது எமது தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

வயதுக்கேற்ற உடலும், உடலுக்கேற்ற உறுதியும் உறுதிக்கேற்ற வனப்பும் இருக்க வேண்டும். வெளியுட லுடன் உள்ளுடலும் உறுதியும், நலமும் பெறவேண் டும். இதற்குத் தகுந்த உடலுழைப்பும் வேண்டும், இதனை, சிறிய பெரிய வேலைகளாலும், தேக, யோக அப்பியாசங்களாலும், உட்புற வெளிப்புற விளையாட் டுகளாலும் இன்ன பிறவற்றாலும் எளிதாகப் பெற் றுக்கொள்ளலாம். அத்தோடு, நிறைவான உணவு, தெளிந்த காற்று, தேவையான ஒய்வு, நிம்மதியும், அமைதியும் நிறைந்த வாழ்வு போன்ற இதர, ஆனால் முக்கிய தேவைகளும் இன்றியமையாதிருக்கின்றன. இவற்றையும் பெற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டும்.

அவை யாவும் சரீவரப் பெற்ருல் உடல் நலம் சிறப்புறும்—மேன்மையுறும். அங்ஙனமாயின் உள்ளம் சிறக்கும்—வாழ்வு மலரும்—அன்பு பண்பு, உயர்வு என்பன வாழ்வில் இழையோடும்—சாந்தி பரிணமிக்கும்.

★

# சிந்தனை

# எதற்கு?

உலகின் கண்ணுள்ள உயிரிகளுக்குள், மனித உயிரிக்கு மட்டுந்தான் சிந்திக்க முடியும். ஏனைய உயிரிகளுக்கு அறிவிருந்துஞ் சிந்திக்க முடியாது. ஏனெனில், அவற்றுக்குப் பகுத்தறிவு இல்லை. மனிதனுக்கு மட்டுமே, எதனையும் ஏன்? எதற்கு? எப்படி? எப்பொழுது? எங்கே? என்று தன்னைத்தானே கேட்டுச் சிந்திக்க முடியும். மேலும் அவன் தனக்கு ஏற்படும் சிக்கல்களுக்கு, ஏற்ற முடிவையுந் தானே காண முடியும்.

மனிதன் சிந்தித்தமையினாற்றான், அவன் விலங்கொடு விலங்காக வாழ்ந்த நிலையிலிருந்து விடுபட்டு-நாகரிகம் அடைந்தான். காட்டிலும், மேட்டிலும் அலைந்து திரிந்து தன்னுணவைத் தேடிய அம்மனிதன், இன்று அதனைத் தன் காலடியிலேயே பெறுகின்றான்-குகைகளிலும், மரப்பொந்துகளிலும் உறங்கிய அவன், இன்று மாடமாளிகைகளிலும், கூடகோபுரங்களிலும்

வாழ்கிறன்-ஆடையின்றி நிருவாணமாகத் திரிந்த அவ்வநாகரிகன், இன்று, பட்டும் பீதாம்பரமும், பொன்னும் மணியும் அணிந்து அழகும், கவர்ச்சியுங் கொள்ள நிற்கிறன்-இவற்றுக் கெல்லாம் காரணம் அவன் சிந்தனையே! இன்னுங் கூறின்-அவனுடைய சுகபோக வாழ்வுகள் அனைத்துக்குந் துணைநின்று உதவுவதும், அவனுடைய பகுத்தறிவினின்று முகிழ்த் தெழும் சிந்தனைச் செல்வமே யெனின், மிகையாகாது.

இத்தகைய சிந்தனைச் செல்வம், மனிதனில் எவ் விதம் உதயமாகிறது என்பதைக் காண்போம்.

தாயின் வயிற்றில் சிசுவாக இருக்கும் போதே மனித சிந்தனைக்குக் கரு உருக்கொண்டு விடுகிறது. சிசுவின் மூளை வளர்ச்சி, குருதியின் முனைப்பில் ஊறுகிறது. மூளையின் புலனுறுப்புகள் வளர, வளரச் சிந்தனைக்கான நினைவுப் புலனும் வளரும். பச்சிளங் குழந்தையாக இருக்கும் போது, அது சிறிது காலத்துக்கு உறங்குநிலை-(Dormant Condition) யில் இருப்பினும், அது விழிப்புடனேயே இருக்கும். நாளடைவில், அஃது அநுபவம்-பட்டறிவு, மீள்செயல் என்பனவற்றுடன் கலந்து - விடுப்பூக்கம் (Curiosity), ஆய்வூக்கம், நாட்டவூக்கம் என்பனவற்றைக் கிளறி விடும். இக்கிளர்வால் சிந்தனை எனும் அரிய மாளிகை வெளிப்படும். இதற்கு - ஆர்வம் அல்லது அவா, அவதானம், கற்பனை, ஞாபகம், மன ஒருமைப்பாடு எனும் பஞ்சமா சக்திகள் எழுநின்று உதவும்.

சிந்தனைக்கு முதற்கண் தேவை ஆர்வம். ஆர்வ மில்லாதவனுக்குச் சிந்தனை இல்லை என்பது பொருள் அல்ல. அவனது சிந்தனை நீர்மேல் எழுத்தாகித் தோன்றி மறையுமே யொழிய, அது கல்மேல் எழுத் தாகாது. ஆர்வம், ஆய்வூக்கத்துக்கு ஊற்றுக் கண்ணுகும். அஃது எதனையுந் துருவித் துருவி ஆராயத் தூண்டும். சிறுசிறு வினக்கள் ஆர்வத்தை மூட்டுங் கருவியாக விளங்கும். தெளிவில்லாத

விடயத்தை இட்டு என்ன? ஏன்? எங்கே? எப்பொழுது? யார்? யாரால்? என்ற வினுக்களை எழுப்பின் அவ் விடயம் சிந்தனைக்கு ஆளாகும். இதன் மூலம் ஒவ்வொரு வரும் ஓர் இயக்கமுள்ள உள்ளத்தைத் தம்முள் வளர்க்க முடியும். தெளிவில்லாத ஒரு விடயத்தைப் பற்றி அறிய வேண்டும் என்று ஆர்வமுறும் பொழுது அதனை யாரிடமாவது அல்லது எவ்விடத்திலாவது அல்லது எங்காவது தெரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணந் தோன்றும். தெரிந்தவரிடம் அதனைக் கேட்க லாம் அல்லது கலைக்களஞ்சியம் போன்ற நூல்களைப் புரட்டிப் பார்ப்பதால் அவ்விடயம் தெரிய வரும். இதனைச் செய்யும் போது, அவ்விடயத்தோடு ஒட்டிய ஏனைய விடயங்களையும், எம்மை அறியாமலேயே ஆராய மனம் ஒருப்படும். இவ்விதம் ஒரு விடயத்தை அறிய வேண்டும் என்ற அவாவுற்றமை யினுற்றுன், கோப்பர்நீகஸ், ஐசக் நியூற்றன், ஜேம்ஸ் வார்ட், பிளேமிங் போன்ற விஞ்ஞானிகள் பற்பல புதிய கண்டு பிடிப்புகளை ஆராயவும் அவற்றைக் கண்டுபிடித்து உலகுக்கு அளிக்கவும் முடிந்தது.

அவதானம் என்று கூறும் போது, ஒரு விடயத்தை அல்லது நிகழ்வைக் கூர்ந்து கவனித்தல் எனப்பொருள் படும். கூர்மையான கவனத்தைக் கண்ணோட்டம் என்றுங் கூறலாம். கூர்மையான அவதானமே, சிந்தனையை வளர்க்கும். கூர்ந்த கவனம் அல்லது அவதானம் மூளையைத் தட்டி எழுப்புகிறது. இவ்வண்ணம் மூளை தூண்டப்பெற, அஃது ஆய்வில் ஈடுபடும். இது சிந்தனையைத் தூண்டி, உள்ளத் திறனை வளர்க்கிறது. கூர்ந்த கவனம் சிறு பராயத்தில் இருந்தே பயிற்றப் படல் வேண்டும். கவனங் குறைவாகும் போது, சிந்தனை சிதைந்து-வழிந்தோடி விடும். கவனம் மனதை ஒருநிலைப்படுத்த வழியமைக்கும். கூர்மையுங் கவனமும் இல்லாத சிந்தனை, பயனுள்ள-தெளிவுள்ள கருத்தை வளர்க்காது.

சிந்தனை, கற்பனை வளத்தைக் கொண்டு வரும். இது, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இயல்பாக-இயற்கையாக உள்ள ஒரு சக்தி எனக்கொள்ளலாம்.

நாடக ஆசிரியர், சிறுகதை-நாவல் எழுத்தாளர், வண்ண ஓவியர், உருவச் சிற்பியர் என்போர் தம்மகத்தின் வெளிப்பாடாகப் பற்பல படைப்புகளைப் படைக்கிறார்கள். இவை உண்மையாக - யதார்த்தமாகவும், அசாதாரணமாகவும், தீவிரமாகவும், அதி தீவிரமாகவும் இருக்கலாம்; நம்பக் கூடியதாகவும், நம்ப முடியாததாகவும் இருக்கலாம். இருப்பினும், அவை யாவும் அவர்களின் அருஞ் சிந்தனையில் ஊறிய அரும் பரல்களே!— கற்பனைச் செல்வங்களே!

கற்பனை வளம் என்று இங்கு குறிப்பிடுவது, ஒரு பெரும் பரந்த கருத்திலேயாம். எழுத்தாளர்களும் ஓவியர்களும், விஞ்ஞானிகளும் காண்பது மட்டுந்தான் கற்பனை என்பதல்ல. பொதுவாக மனிதராகப் பிறந்த அனைவரும் இளமை முதல் கற்பனை செய்யும் ஆற்றல் உடையவர்களாகவே இருப்பர். கற்பனைத் திறன், மனிதனுடைய ஆற்றல் மிகுந்த ஒரு சக்தியாகும். இவ் வல்லமையை ஒரு சிலர் நன்கு பேணிக்காத்து, வளர்க்கின்றனர். ஆனால், பலர் அதனை அநாதைப் பிள்ளையாக அலைய விட்டு விடுகின்றனர். இதனை, இளம்பராயம் முதற் கொண்டு வளர்த்துவரின்-பயனுள்ள சிந்தனை உருவாகும். அத்தகைய கற்பனை வளத்தை ஆற்றல் மிகுந்ததும், ஆக்க பூர்வமானதுமான வெளிப்பாடாகக் கொண்டுவரின் பயன் இருக்கும். எம்மிற் பலரது கற்பனைகள் யாவும் பயனுள்ள - உருவுள்ளவையாக வெளிப்படுவதில்லை. இதற்குக் காரணம்-அவர்களுக்குப் போதிய சிந்தனை ஆற்றலும், சிந்தனைக்கேற்ற முன்னநுபவமும், முன்னறிவும் இல்லாமையே யாகும். உள்ளத் திறனை விருத்தி செய்தாற்றான் கற்பனைத் திறனும் வளரும். கற்பனைவளம் வாழ்வைச் செம்மைப்படுத்தவும், செழிப்படையச் செய்யவும் வழி வகுக்கும். இவ்விதம்,

தம் கற்பனை வளத்தை வளர்த்தமையினுற்றுன் வள்ளுவர் - கம்பர் - சேக்ஸ்பியர் - தாகூர்-பெர்னுட்ஷா போன்ற இலக்கிய கருத்தாக்களேயும்; மற்றும் விஞ்ஞான மேதைகளேயும்; சிற்ப-ஓவிய-இசை மேதா விலாசங்களேயும் நம் வாழ்விற் காண முடிகிறது.

சிந்தனைக்கு இன்றியமையாத இன்னுமொரு சக்தி நினைவாற்றல் அல்லது ஞாபகத் திறனுகும். இதனை விருத்தி செய்வதன் மூலம் உள்ளத்திறனை அதிகரிக்கலாம். காணுங் காட்சியை-கற்கும் அறிவை, முன் நிகழ்ந்த நிகழ்வை-செயலே நினைவில் இருக்க வைத்தலே நினைவிருத்தற் செயலாகும். இது ஒரு விசேட திற னுகக் கொள்ளப் பெறும். இத்திறனை விசேட பயிற்சி யினுற்றுன் பெற முடியும். இளம் வயதினர், இத் திறனைத் தமது இளமைப் பராயத்திலேயே பெற்றுக் கொள்ள வழி செய்து கொள்ள வேண்டும். முதுமை யில், இதனை வளர்த்துக் கொள்வது கடினம். இதனுலேயே, பள்ளி மாணவர் இதற்கான பயிற்சியை தமது பள்ளியில் கதை - கவிதை - சூத்திரம் - போன்ற பாடங்களே மனனஞ் செய்வதில் ஈடுபடுத்தப்டுபவர். ஏனெனில், இளமையிற்றுன் மனனஞ் செய்யும் ஆற்றலும்-நினைவிருத்தும் சக்தியும், சிலேயில் வடித்த உருவம் போல் ஆழப்பதியும். முதுமைப் பருவத்தில் இவ்வாற்றல் உடல் நலிவால் தளர்வுற்றுப் பாதிக்கப் படும். அப்பொழுது ஞாபக மறதி அதிகரித்து மேலோங்கி நிற்கும்.

மாணவருட் சிலர், தமக்கு எதுவும் ஞாபகத்தில் இருப்பதில்லேயே! என்று கவலேப்படுவதை யாம் காணு கிறேம். இது முற்றிலும் அபத்தமான கூற்றுகும். இஃது அம்மாணவரின், மனச்சிக்கலே அன்றி வேறு ஒன்றுமில்லே. ஒரு விடயம், குறிப்பாக இளம் வயதி னருக்கு எப்பொழுதும் கூர்மையாக-தெளிவாக மனதிற் படும் பட்சத்தில், அஃது அவர் மனதில் ஆழப்பதியவே

செய்யும். இம்மனப் பதிவை, அவர்கள் ஒருமுறைக்குப் பன்முறை மீட்டு மீட்டு சிந்தனை செய்யின், அச் சிந்தனை திடமான ஞாபகத்திறனை முகிழ்க்கச் செய்யும். ஆதலால், ஞாபகத்திறன் யாருக்குங் கிடைக்க வொண்ணா ஓர் அருஞ் சக்தியன்று. ஆர்வமுடையோர்-அவதானம் உடையோர் - மீள்பயிற்சியுடையோர் - ஒருமையான சிந்தனையுடையோர் எவரும் ஞாபகத்திறனைப் பெறலாம்.

சிந்தனைக்கு அடுத்ததாக வேண்டப்படுவது, மனவொருமைப் பாடாகும். முன் கூறிய அவதானம், நினைவிருத்தல், என்பன உருவாவதற்கு மனம் ஒரு நிலையில் வயப்படல் வேண்டும்.

ஒன்றை நினைக்கின், அஃதொழிந்து இன்னொன்றுகும். மனம் ஒரு குரங்கு. அது வினாடிக்கு வினாடி மாறி மாறி அலைந்து திரியும். அதனைக் கட்டுப்படுத்தி ஒரு நிலையில் வைப்பது மிகவுங் கடினத்திலும் கடினம். இதனாலேயே - மனிதன், கொடிய வனவிலங்குகளையும் அடக்கி தன்னுள்ளுக்குள் கொண்டு வரலாம்; வானிற் பறந்தும்-நீரில் நடந்தும்-தீயில் நுழைந்தும் மண்ணில் விளையாடியும் - வளியில் வலம் வந்தும் பெருஞ் சாதனை செய்து வரலாம்! ஆனால், அவன் தன் மனதை மட்டும், ஒரு கணப் பொழுதாயினும் மட்டுப்படுத்தி ஒரு நிலையில் வைக்க முடியாது எனக் கூறியிருக்கிறார்கள், பெரியோர்கள். இஃது ஓரளவு உண்மையே! ஆயினும், அவன் நினைத்தால்-தன்னுறுதியை வைராக்கியத்தோடு செயற்படுத்தினால், அதுவும் செய்யக் கூடிய செயலாகவே ஆகும். இதற்கே, ஞானியரும், யோகியரும் வழிகள் பலவற்றைக் கண்டு பிடித்ததோடு, அவற்றில் வெற்றியுங் கண்டுள்ளனர். இறை பக்தி, மௌனம், தியானம் என்பன மனவொருமைக்கு வழிவகுக்கும். இஃது அமைதியான சூழ்நிலையில்-தூய்மையான எண்ணத்தில்-சீரான ஒழுக்கத்தில்-ஒழுங்கான பயிற்சியில் முளைவிடும். கூர்மையான அவதானத்திலும் நேர்மையான அறிவிலும் கிளை விடும். இதற்கு

முதற்கண் சாதகர் தன்னுள் தன்நம்பிக்கை கொள்ள வேண்டும். அலைபாயும், மனதை ஒருநிலையிற் குவியச் செய்ய 'என்னால் முடியும்' என்ற மனோதிடம் கொள்ள வேண்டும். அடுத்து முயன்றால், ஆகாததும் ஒன்றுளதோ உலகில்?

சிந்தனை வேண்டும். அது நல்லதாகவும் இருக்க வேண்டும். நற்சிந்தனை ஆன்மீக பலத்தையும், நல்லொழுக்க நெறியையும், நேரிய திடசங்கற்பத்தையும், நல்லெழில் வாழ்வையும் வாழ்வில் மலரச் செய்யும். தீய சிந்தனை, சாத்தானின் சொர்க்கம் என்பர். அது பஞ்சமா பாதகங்களுக்கு இட்டுச் செல்லும் இராஜ பாட்டையாக விளங்கும். சிந்தனை வேண்டும் என்பதற்காகத் தீய சிந்தனைகளைச் சிந்திப்பது நல்லதல்ல. அது 'பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதை'யாகி முடியும்.

மனிதன், மனிதனாக வாழச் சிந்தனை வேண்டும். அதுவும் பயனுள்ள-நற்சிந்தனையாக இருக்க வேண்டும். இது தவறின்-அது மனிதனை விலங்கிலும் விலங்காக மாற, வழிவகுத்து விடும்.

★

# மொழி

# எதற்கு?

மொழி எதற்கு என்பதனை அறிய முன், மொழி என்ருல் என்ன என்பதை முதற்கண் தெரிந்து கொள்ளுவது, நல்லது.

மொழி எனின், பாஷை (பாடை), பேச்சு, சொல், கிளவி எனப் பல பதங்களிற் கருத்துக் கூறலாம்.

மொழி ஒரு கருவி-சாதனம்.

பழத்தை அறுத்து உண்ண, ஒரு கத்தி தேவை. அதனைப் போலவே, எமது உள்ளத்தில் ஊறும் உணர்வை-பிறருக்கு எடுத்து உணர்த்த உதவுவது மொழியாகும். மொழி என்ற கருவி இல்லையேல், உள்ளத்து உணர்வுகளைச் செம்மையாக எடுத்து விளக்க முடியாது. ஓர் ஊமையன், தன்னுள்ளத்து உணர்வை சைகை (Gesture) யால் உணர்த்துவான். அதனை, நாம் புரிந்து கொள்வது கடினம்.

மொழி, ஒலி வழியிற் பிறக்கும். உள்ளத்து ஒலி, உணர்வின் உந்தலால் நாபிக் கமலத்திலின்று காற்றாக ஊறி, குரல்வளை (மிடறு), மூக்கு, அண்ணம், பல் போன்ற உள்ளுறுப்புகளைத் தாக்கி, நாவினூடாக வெளிப்படும். இவ்வொலி, குரல் வேறுபாட்டாலும்; மாத்திரை வேறுபாட்டாலும்; அலகுநிலை (Pitch) வேறுபாட்டாலும் அவ்வவ் நிலைகளுக்கு ஏற்ப, வெவ் வேறு உணர்வுகளை உணர்த்தும்.

மொழியின் வரலாற்றை ஆராயின்-அது ஒரு நீண்ட தொடர் கதையாகும். அதற்கு இங்கு, காலமும் இடமும் இல்லை. எனினும், அதனைச் சுருக்கமாக ஆயினும் தெரிந்து கொள்ளாவிடின்-எடுத்த விடயம் பூரணமாகாது. எனவே, அதனை இங்கு, சுருங்கக் காண்போம்.

மனித இனமும், ஏனைய உயிரிகளைப் போன்றே பண்படாது வாழ்ந்து வந்த காலம் ஒன்றிருந்தது. அந்நாளில், மனிதன் காட்டிலும், மேட்டிலும், குகைகளிலும், மரப்பொந்துகளிலும் விலங்கொடு விலங்காக காட்டுமிராண்டியாக வாழ்ந்தான். பசித்த பொழுது. கையில் அகப்பட்டதைப் புசித்தும்; உறக்கம் வந்த போது, அது வந்த இடத்திலேயே உறங்கியும் வந்தான், அம்மனிதன். அப்பொழுது, வாயிருந்தும் பேசத் தெரியாதும் - செவியிருந்தும் ஒலியின் பேதமறியாதும் ஊமையாய்-செவிடாய் இருந்தான், அவன்.

கால மாற்றம், அவன் நடத்தையிலும் புதுப் புதுக் கோலங்களைக் கொணர்ந்தது. அதன் பயனாக, தன்னுள்ளத்து உணர்வுகளை - உந்தல்களை, தன்னை

யொத்த பிறிதோர் உயிரிக்கும் எடுத்தியம்ப முனைந் தான், அவன். இம் முனைப்பே மொழிக்கு வித்தாயிற்று.

வாயிலிருந்து மொழி பிறக்கு முன், அவன் தன் உணர்வுகளைத் தன் கைகளினாலும், கண்களினாலும் மற்றும் அங்க அசைவுகளினாலும் வெளிப்படுத்தினான். இது வளர்ச்சியும், விருத்தியும் பெற, அதில் மாற்ற மும் ஏற்பட்டன. அதனால், அவனது மனவுந்தல்கள் குரல்வளை ஊடாக நாவை அடைந்து வெளியேறின. இதனைக் குரல் என்றனர். தொடக்கத்தில், இக் குரல் ஒலிக்குக் கருத்து இருக்கவில்லை. அது சைகையோடு சேர்ந்து மூங்கை மொழி அல்லது சைகை மொழி (Gesture Language) ஆக மட்டுமே விளங்கியது. பின்னர், இயற்கையின் தட்ப-வெப்பச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, அக்குரல் ஒலி நீண்டும் - குறுகியும் - முடிந்தும் முடியாமலும் - மாற்றமுற்றும் - மாற்றமுறாமலும் ஒலிக்க, அதில் மனவுணர்வுகளுக்கு உரிய பொருள் (கருத்து) கொள்ளப்பெற்றது. இதனைச் சொல் என்றனர்.

முதலில், ஒரு சொல் தனிப் பொருளை மட்டுமே உணர்த்திற்று. பின்பே, ஒரு சொல் பல சொற் களுடன் கூடி நிற்க, வார்த்தைகள் பிறந்தன. மேலும் அவ்வுணர்வொலி மீண்டும் மீண்டும் மீட்டல் செய்யப் பெற, அதிலிருந்து போலியொலி பிறந்தது. போலி யொலி, குறிப்பிட்ட பொருளை உணர்த்த, அது குறிப்பொலி ஆயிற்று. இவ்விதமே, உணர்வொலி, போலியொலி-குறிப்பொலி எனும் மூவொலிகளும், மனித இனத்தின் கருத்தை வளர்த்தன. இதன் வளர்ச்சி, நாளடைவில் பேச்சொலியைத் திருத்த முறவும், பண்படவும், சிறப்புறவும் வழி செய்து வைத்தது. மொழிக்கு உதவியாக வரிவடிவமான எழுத்தும் பிறந்தது. இவ்வண்ணம் திருந்திய மொழி இலக்கியத்தையும், இலக்கணத்தையும், பெரும்

பேருகப் பெற்று-இன்று உலகெலாம் உலா வந்து நிற்கிறது.

மொழி - கால, தேச, வர்த்தமானங்களுக்கு ஏற்ப வேறுபடும்.

இதனுலேயே ஆங்கிலேயன் தன் தேசத்தில் எழுப்பிய ஒலியினுல் ஆங்கில மொழியை மொழிகிறுன்; சீனன் தன் இராச்சியத்தில் எழுப்பிய ஒலியினுல் சீன மொழியைப் பேசுகிறுன், தமிழன் தன் நாட்டில் எழுப்பிய ஒலியினுல் தமிழைப் புகல்கிறுன். தமிழன்-சீனன்-ஆங்கிலேயன், எவனுனுலும் அவன் தன் நாவால் எழுப்பும் ஒலி ஒன்றே! ஆயினும், அவனவன் ஒலியில்-அவனவன் கொள்ளும் பொருட்கோடலிலேயே, அவனவன் மொழி விளங்கும். சீனன், தன் மொழியில் ஒரு சீனனேடு அல்லது அவன் மொழி தெரிந்தவனேடு தன்னுள்ளத்து உணர்வை உணர்த்திக் கொள்ளுகிறுன். அவன் மொழி, தெரியாதவன் அவன் உணர்வைப் புரிந்துகொள்ள முடியாது. இந் நிலையிற்றுன், மொழி ஒரு கருவி என யாம் கூறுகிறேம்.

இக் கருவியை, இன்றைய மனிதருள் சிலர் தவருகப் புரிந்து கொள்வதால், அவர்கள் பல்வேறு இடர்பாடுகளுக்குள்ளாகித் தத்தளிக்கிறுர்கள். மொழி ஒரு கருவி என்ற உண்மையை விட்டு, 'அது தான் தமது உயிர்!' 'அஃது இல்லாவிடில், தமது வாழ்வே இல்லை' எனச் சன்னதங் கொண்டு சதிராடுகிறுர்கள்!

இஃது உண்மையா? சிந்திக்க வேண்டும்.

ஆரியர், தம்மொழி தான், தேவபாஷை என்றும், பிற மொழிகள் யாவும் மிலேச்சர் மொழி என்றுங் கூறுகின்றனர். தமிழர், ''தமிழ் மொழி போல் இனிதாவதெங்குங் காணேம்'' என்றும், ''தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என்றும் 'தமிழே தமது மூச்சு! தமிழே தமது உடல்-பொருள்-ஆவி அத்தனையும்' என்றும் உணர்ச்சி

வசப்படுகின்றனர். ஆங்கிலேயன், தன் மொழியே வாணிபத்துக்கு ஏற்ற மொழி என்கிறன். பிரான்சியன், தன் மொழி தான் காதல் மொழி என்கிறன். தமிழன் கூட, தன் மொழி தான் என்றும் கன்னிமை நீங்காக் கன்னித்தமிழ் என் கிறன். இப்படியே, இத்தாலியன்-ஜெர்மனியன்-சீனன்-ஜப்பானியன்-இந்தியன்-சிங்களவன், எல்லோரும் தத்தம் மொழியே சிறந்தது-உயர்ந்தது-மேலானது என்று, வாய்ப்பறை கொட்டி, முழக்கித் திரிகின்றனர்.

இதனுல் ஏற்படுவது என்ன?

தன்மொழிப் பற்று இருக்க வேண்டும். மறுப்பதற்கில்லை. ஆனல், அது வெறி கொள்ளும் அளவுக்குச் செல்லக் கூடாது. மொழி வெறி, பிற மொழி மீது வெறுப்பை மூட்டும். இவ்வெறுப்பு, பகை-அழிவு-சருவநாசம்... என்று வளர்ந்து, தன்னையும் அழித்து, தன் இனத்தையும் ஒழித்து விடும். ஈற்றில் அது மனிதத்துவத்தையே குழிதோண்டிப் புதைத்து விடும்!

இதுவோ, மொழியின் பயன்?

★

மணிவாசகர் நல்கிய,

திருவாசகத்தில் ஒரு பரல் - திருவெம்பாவை!
அது, மார்கழி மாதத்து மாண்பு மிகு பொற்குவை!

அதனை—

★ இனிய-தெளிந்த-செந்தமிழ் நடையில்;
★ உட்பொருளும், வெளிப்பொருளுந் தெட்டத் தெளிவுறத் தெரியும் வகையில்

# மார்கழி மங்கையர்

எனும் அரிய நூல் வடிவில் தந்துளார்,

வை. நாகராஜன்.

படித்துப் பாருங்கள்! சுவைத்துப் பாருங்கள்!




**நூலின் விலை:**

நூலகப் பதிப்பு:- ரூ. 3.00
பொதுநிலைப் பதிப்பு:- ரூ. 2.00
(தபாற் செலவு வேறு)

**கிடைக்குமிடம்:**

வைரமான் வெளியீடு,
525/29, புதிய நகர்,
அநுராதபுரம்.



966



JAFFNA



இந்நூல் ஆசிரியர்,

# வை. நாகராஜன்

எழுதிய

# மார்கழி மங்கையர்

நலம் நவில வந்த—

தவத்திரு, குன்றக்குடி அடிகளார்.....

''மார்கழி மங்கையர்,'' சிறுகதையைப் போல் உருவாகியுள்ளது. இஃது, இக்காலத்துக்குப் பெரிதும் பயன்படக் கூடிய பாணி. இனிய, தூய ஆற்றொழுக்கில் நூலின் போக்கு அமைந்துளது. ஆங்காங்கே தத்துவ விளக்கங்களும் இடம் நோக்கிப் பெய்யப்பட்டுள்ளன............''

"பொதுவாக இந் நூலைப் படிக்கும் போது-திருவெம்பாவையில் மூழ்கித் திளைத்து ஊனும், உயிருங் கலந்த ஆசிரியரின் அநுபவங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன. விளக்கந் தர எழுந்த சொற்கள் மின்னிப் பளிச்சிடுகின்றன. இனிய முயற்சி. தமிழுலகம் துய்த்து மகிழ்வதாக............''

எனத் திருவாய் மலர்ந்து அருளியுள்ளார்.